

# SHRI KRISHNA ACADEMY

# TAMIL-MINIMUM MATERIAL 2019-2020

## சிறப்பம்சங்கள்

- அரசுப் பொதுத்தேர்வு விடைக்குறிப்புகள் அடிப்படையில் கற்றல் கையேடு(Minimum Material) உருவாக்கப்பட்டுள்ளது.
- மெல்லக் கற்கும் மாணவர்கள் விரைவாகக் கற்று அதிக மதிப்பெண் பெறும் வகையில் இவ்விடைக்களஞ்சியம் அமைக்கப்பட்டுள்ளது.
- அரசுப் பொதுத்தேர்வு தேர்வில் கட்டாயமாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு(அகவய வினாக்கள்) விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது.
- கற்பதற்கு எளிய நடையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- புறவய வினாக்கள் மற்றும் அகவய வினாக்கள் விடைக்குறிப்புகளுடன் அமைந்துள்ளது.

CONTACT:9965531727,9443231727

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

## இயல் - 1

**பலவுள் தெரிக. (புத்தக ஒரு மதிப்பெண் வினாக்கள்)**

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் **இ) தொல்காப்பியம்** ஈ) நன்னூல்

2. “மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு” கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது

உ) பொதிகையில் தோன்றியது

ங) வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி இ) ங மட்டும் சரி **ஈ) க,ங இரண்டும் சரி**

3. “மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது

தன்னேர் இலாத தமிழ்!” - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்

அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை

**இ) அடிஎதுகை, சீர்மோனை** ஈ) சீர்எதுகை, அடிமோனை

4. **கருத்து 1 :** இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு

**கருத்து 2 :** தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி

**இ) இரண்டு கருத்தும் சரி** ஈ) கருத்து 1 சரி 2 தவறு

5. **பொருத்துக**

அ) தமிழ் அழகியல் - 1) பரலி சு.நெல்லையப்பர்

ஆ) நிலவுப்பூ - 2) தி.சு.நடராசன்

இ) கிடை - 3) சிற்பி. பாலசுப்பிரமணியம்

ஈ) உய்யும் வழி - 4) கி.ராஜநாராயணன்

அ) 4, 3 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 **ஈ) 2, 3, 4, 1**

**கூடுதல் ஒரு மதிப்பெண் வினாக்கள்**

1. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்

அ) ஒளிப்பறவை ஆ) சூரிய நிழல் **இ) ஒரு கிராமத்து நதி** ஈ) நிலவுப் பூ

2. ‘வியர்வை வெள்ளம்’ இலக்கணக் குறிப்பு தருக.

அ) உவமையாகுபெயர் ஆ) கருவியாகுபெயர் **இ) உருவகம்** ஈ) உவமைத்தொகை

3. தண்டி எந்த நூற்றாண்டைச் சார்ந்தவர்

அ) கி.பி.11 **ஆ) கி.பி.12** இ) கி.பி.13 ஈ) கி.பி.14

4. இருளைப் போக்கும் இரண்டு

அ) கதிரவன், நிலவு **ஆ) கதிரவன், தமிழ்** இ) அறிவு, தமிழ் ஈ) அறிவு, ஞானம்

5. ‘கிடை’ என்னும் குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்களைச் சொல்லி அழைப்பவர்

அ) இந்திரா பார்த்தசாரதி **ஆ) கி. ராஜநாராயணன்** இ) ஜெயகாந்தன் ஈ) ஜெயமோகன்

6. ‘தொடியுடைய தோள் மணந்தனன்’ எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலின் ஆசிரியர்

**அ) பேரெயின் முறுவலார்** ஆ) பொன்முடியார் இ) கோவூர்கிழார் ஈ) வெள்ளைக்குடி நாகனார்

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

7. வம்சமணிதீபிகை (1879) என்னும் நூலை வெளியிட்டவர்

அ) வெங்கடேசுர எட்டப்பர் ஆ) இளசை மணி

**இ) கவிகேசரி சாமி தீட்சிதர்** ஈ) பரலி. சு. நெல்லையப்பர்

8. பரலி சு.நெல்லையப்பர் ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்கள்

அ) சூரியயோதயம், கர்மயோகி ஆ) குயில், தேசபக்தன்

**இ) லோகோபகாரி, தேசபக்தன்** ஈ) கர்மயோகி, குயில்

**குறுவினாக்கள் (புத்தக இரண்டு மதிப்பெண் வினாக்கள்)**

1. **நடை அழகியல் பற்றித் தொல்காப்பியத்தின் கருத்தைக் குறிப்பிடுக.**
   - ❖ நடைபெற்றியலும்
   - ❖ நடைநவின்றொழுகும்
   - ❖ ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை
     வெண்பா நடைத்தே கலி
2. **"படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**
   **கடாஅ யானைக் கலிமான் பேக" - இச்சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.**
   - ❖ படாஅம் - செய்யுளிசை(இசைநிறை) அளபெடை
   - ❖ கெடாஅ - செய்யுளிசை(இசைநிறை) அளபெடை
   - ❖ கடாஅ - செய்யுளிசை(இசைநிறை) அளபெடை
3. **கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?**
   - ❖ உழைக்கும் உழைப்பாளர்களின் கரங்கள் சிவந்து துன்பத்தை அடைய, தொழிலாளர்களின் வியர்வையாகிய வெள்ளம் பருத்த தோள்கள் மீது முத்துக்களைப் போல் அமர்ந்திருக்கும்.
4. **விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.**
   - ❖ மார்கழி **விடியலில்** வண்ணக்கோலமிடுவது **வனப்பு** மிகுதியாக இருக்கும்.

**கூடுதல் இரண்டு மதிப்பெண் வினாக்கள்**

1. **சிற்பியின் படைப்புகள் யாவை?**

   **கவிதை படைப்புகள்:**
   - ❖ ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி

   **உடைநடை நூல்கள் :**
   - ❖ இலக்கியச் சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும்
2. **தண்டியலங்காரத்தின் மூன்று பெரும் பிரிவுகள் யாவை?**
   - ❖ பொதுவியல் , பொருளணியியல், சொல்லணியியல்
3. **கவிதையின் மறுதலைத் தொடர் என்பது யாது?**
   - ❖ உரைநடை வழக்கு, பேச்சுவழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது, எழுவாய் + செயப்படுபொருள் அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை என்று வருவதே மரபு.
   - ❖ ஆனால் சங்கப் பாடல்கள் பலவற்றில் இது பிறழ்ந்து வருகிறது. இதுவே கவிதை மறுதலைத் தொடர் எனப்படும்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

SHRI KRISHNA ACADEMY www.Padasalai.Net

4. **கலை முழுமை என்றால் என்ன? (அல்லது) கலை முழுமை பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுவது யாது?**

- ❖ தொல்காப்பியம் மிகவும் தெளிவாக, இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்துநிலைகள், கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்பதனைச் சுட்டிக்காட்டியுள்ளது. இத்தகையதொரு முழுமைதான் கலைமுழுமை எனப்படுகிறது.

5. **சொல்லில் ஆய்த எழுத்தின் நிலை குறித்தெழுதுக**

- ❖ ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்
- ❖ தனிச்சொல்லாயின் மூவெழுத்தாகவும், தனிக்குறிலை அடுத்தும் வரும்.
- ❖ சான்று: அ.ஃ.து, எ.ஃ.கு, க.ஃ.சு

**சிறுவினாக்கள் (புத்தக நான்கு மதிப்பெண் வினாக்கள்)**

1. **சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.**

- ❖ எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்குகிறது.
- ❖ மொழி சார்ந்த கவிதையும் இசையோடும் இசைக்கருவியோடும்தான் பிறக்கிறது.
- ❖ ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன.
- ❖ இதனையே அந்தப் பனுவலின் பாடலின் - ஒலிப்பின்னல் (sound texture) என்கிறோம்.
- ❖ உயிர் ஒலிகள் - குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரல் தன்மை பெற்றிருப்பதும் இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் இங்கே கவனத்திற்குரியன.

2. **'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.**

- ❖ சிவந்த சூரியன் மாலைப் பொழுதில் மேற்கு திசையில் மறைவான்.
- ❖ சூரியன் மேற்குத் திசையில் மறையும் போது சூரிய ஒளி வானமெங்கும் பரவிக் காணப்படுவது ஒரு இயல்பான நிகழ்வு.
- ❖ வானம் முழுவதும் பரவி செந்நிறப் பூக்காடு போலத் தோற்றமளிக்கிறது என்று நயம்படக் காட்டுகிறார்.

3. **ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :**

தண்டி என்பவரால் எழுதப்பட்ட தண்டியலங்கார உரை மேற்கோள் பாடலில் இடம் பெற்றுள்ளது.

**பொருள்:**

கடலால் சூழப்பட்ட இந்த உலகத்தின் புற இருளை அகற்றும்.

**விளக்கம் :**

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றும்.

4. **பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.**

| **பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே<br>- நன்னூல்** | **மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா,வா!<br>-சிற்பி பாலசுப்பிரமணியம்** |
|---|---|
| ❖ காலத்திற்கேற்ப நல்லனவற்றில் பழமை நீங்கி புதுமை புகுதல் தவறில்லை.<br><br>❖ "புதுமை புகுதல் வேண்டும்" | ❖ பாண்டியனால் சங்கம் வைத்த வளர்க்கப்பட்ட தமிழ், பாரி போன்ற வள்ளல்களைத் தோற்றுவித்தது. அதுபோன்ற பழமை மீண்டும் நடைபெற வா! வா! எனத் தமிழை அழைக்கிறார் கவிஞர்<br><br>❖ "பழமை மீண்டும் வர வேண்டும்" |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

கூடுதல் நான்கு மதிப்பெண் வினாக்கள்

## பொருள் வேற்றுமை அணி

**அணி இலக்கணம் :**

இருவேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுப்படுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி ஆகும்.

**சான்று :**

**“ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி”** எனத் தொடங்கும் தண்டி எழுதிய தண்டியலங்காரப் பாடல்

**சான்று விளக்கம்:**

**சூரியன்: 1.** உதயகிரியில் தோன்றுதல் 2. மேன்மக்களால் தொழப்படுதல் 3. இருள் அகற்றுதல் ஆகிய மூன்று குணங்களை உடையது.

**தமிழ்**: **1.**பொதிய மலையில் தோன்றியமை 2. அறிவுடையோர் தொழுதேத்தும்படி விளங்குதல் 3. அறியாமை இருளை அகற்றுதல் ஆகிய மூன்று குணங்களை உடைய தமிழ்மொழிக்கு நிகராக எம்மொழியும் இல்லை.

**அணிப்பொருத்தம்:**

கதிரவனும், தமிழ்மொழியும் மலையில் தோன்றுகின்றன என ஒப்புமையைக் கூறி, அவற்றுள் தமிழ்மொழிக்கு நிகராக வேறெந்த மொழியும் இவ்வுலகில் இல்லை என்று வேறுபடுத்திக் காட்டியதால் இப்பாடல் பொருள் வேற்றுமையணி ஆகும்

**கதிரவன் - புற இருளை அகற்றும்; தமிழ்மொழி - அக இருளை அகற்றும்**

நெடுவினாக்கள் (புத்தக ஆறு மதிப்பெண் வினாக்கள்)

1. **கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.**

**ஒலிக்கோலங்கள் :**

- ❖ எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்குகிறது.
- ❖ மொழி சார்ந்த கவிதையும் இசையோடும் இசைக்கருவியோடும்தான் பிறக்கிறது. ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன.
- ❖ உயிர் ஒலிகள் - குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரல் தன்மை பெற்றிருப்பதும் இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் இங்கே கவனத்திற்குரியன. இந்த ஒலிக்கோலம் சங்கப்பாடல்களில் முக்கியமான ஒரு பண்பு.

**சொற்புலம்:**

- ❖ சொல்வளம் என்பது ஒருபொருள் குறித்த பல சொல், பல பொருள் குறித்த ஒரு சொல் பலதுறை, பலசூழல், பலபுனைவுகளுக்கும் உரியதாய் வருதலும், உணர்வும், தெளிவும் கொண்டதாய் வருதலும், என்றவாறு செழிப்பான தளத்தில் சொற்கள் விளைச்சல் கொண்டிருப்பதைக் குறிக்கும்.
- ❖ சான்றாக முல்லைக்கலியில் காளைகளில் பல இனங்களைக் காட்டுகின்ற சொற்கள் நிறைந்து அமைவதையும் காட்டுகிறது.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

- ❖ தொகைமொழி என்பது செறிவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பு. அது வாக்கிய அமைப்பில் ஒரு சொல் போலவே நடைபெறும்.
- ❖ சான்றாக வைகுறுவிடியல், கவினுறு வனப்பு என்பன.

**தொடரியல் போக்குகள்:**

- ❖ நூலைப் படைத்தவர் பெற்ற உணர்வை படிப்பவரும் பெறுதல் வேண்டும். உணர்வுகளுக்கும் செய்திகளுக்கும் ஏற்பத் தொடர்கள் அமைந்து இயங்க வேண்டும். இயல்பு வழக்கிலிருந்து இலக்கிய வழக்கிற்கு மாறும் பிறழ்வு நிலை வெளிப்பாட்டினைப் புறநானூற்றுப் பாடலில் காண முடிகிறது.

**“இடுக வொன்றோ, சுடுகவொன்றோ ------ (புறம்.239)**

- ❖ இந்த இறுதி அடி ஓர் எளிமையான தொடரியல் பிறழ்வோடு அமைந்திருக்கிறது.
- ❖ 18 பண்புகளைக் கூறி, “புதைத்தால் புதை சுட்டால் சுடு” என்று அலுத்துக் கொள்கிறது. பாடலின் தொடரியல் சார்ந்த வடிவமைப்பு இதற்குத் துணை நிற்கிறது.

**2. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.**

**மொழிப்பற்று :**

- ❖ தமிழ், தமிழ், தமிழ் - என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்ள வேண்டும்.
- ❖ புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் - தமிழில் ஏறிக்கொண்டே போக வேண்டும்.
- ❖ உள்ளமே உலகம்! ஏறு! ஏறு! ஏறு! மேலே! மேலே! மேலே! நிற்கும் நிலையிலிருந்து கீழே விழாதபடி கயிறுகள் கட்டி வைத்துக்கொண்டு பிழைக்க முயற்சி செய்யும் பழங்காலத்து மூடர்களைக் கண்டு குடல் குலுங்கச் சிரி.
- ❖ உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ. பற! பற! – மேலே! மேலே! மேலே! என்ற பாரதியார் மொழியைச் சிறப்பிக்கிறார்.

**சமூகப் பற்று :**

- ❖ தமிழ்நாடு வாழ்க, தமிழ்நாட்டில் நோய்கள் தீர்க, தமிழ்நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக, அந்தத் தமிழ்ப்பள்ளிக் கூடங்களிலே நவீன கலைகளெல்லாம் பயிற்சி பெற்று வளர்க என்றெல்லாம் எழுது என்று பாரதியார் கூறுகிறார்.
- ❖ ஆணும் பெண்ணும் ஓருயிரின் இரண்டு தலைகள், அவை ஒன்றிலொன்று தாழ்வில்லை, பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான், பெண்ணை அடைத்தவன் கண்ணை அடைத்தான் என்றெல்லாம் எழுது என்று பாரதியார் கூறுகிறார்.
- ❖ தொழில்கள், தொழில்கள் என்று ஓசை எழுப்புங்கள்; வியாபாரம் வளர்க, இயந்திரங்கள் பெருகுக, முயற்சிகள் ஓங்குக, சங்கீதம், சிற்பம், இயந்திரநூல், பூமிநூல், வானநூல், இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் இவை தமிழ்நாட்டிலே பெருகிடுக என்று முழங்கு. என்று சமூகப் பற்று குறித்துப் பாரதியார் கூறுகிறார்.

**3. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்ரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

- ❖ சிவந்த சூரியன் மாலையில் மலை உச்சியில் சென்று மறைவான்
- ❖ சிவந்த நிறத்தை உடைய பூக்கள் நிறைந்த காடு ஆகும்.
- ❖ வானம் முழுவதும் சூரியனின் செந்நிறத்தைப் போல உழைக்கும் உழைப்பாளர்களின் கரங்கள் சிவந்து துன்பத்தை அடைய, தொழிலாளர்களின் வியர்வையாகிய வெள்ளம் தொழிலாளர்களின் பருத்த தோள்கள் மீது முத்துக்களைப் போல் அமர்ந்திருக்கும்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

- ❖ கவிஞர்களின் மனதில் பொங்கி வருகின்ற கவிதை எண்ணத்திற்கு உணவாய் நீ உள்ளாய்.
- ❖ பாண்டிய மன்னர்கள் போற்றிய சங்கப்பலகையில் உயர்ந்த சிம்மாசனத்தில் அமர்ந்து இருந்தாய்.
- ❖ பாரி போன்ற கடையேழு வள்ளல்களைப் பெற்றுத் தந்தாய்!
- ❖ மொழிக்குப் பெருமை சேர்க்க மீண்டும் அந்தப் பழமை நலம் புகுத்துவதற்கு உடல் சிலிர்க்கும் படி தமிழாகிய குயிலே வா! பாடி வா!
- ❖ கூண்டு அதனை உடைத்து எழுந்த சிங்கம் போலப் பொதிகை மலையில் தோன்றிய தமிழே ஆற்றலுடன் விரைந்து வா! என்று தமிழின் சீரிளமைத் திறம் குறித்துச் சிற்பி பாலசுப்ரமணியம் வியந்து கூறுகிறார்.

**4. 'சொல்லோவியங்கள்(கவிதை)' என்னும் நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை ஒன்றை எழுதுக.**

**நிகழ்ச்சி நிரல்:**

**சொல்லோவியங்கள்**

**கவிதை வெளியீட்டுவிழா - 2019**

இடம் : அரசு மேல்நிலைப்பள்ளி, xxxx

நாள் : 19.06.2019

நேரம் : பிற்பகல் 3 மணி

| | |
|---|---|
| வரவேற்புரை | : திரு. தொல்காப்பியன் (தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, **xxxx** |
| நூல் அறிமுக உரை | : தி.ப. பிறைசூடன் அவர்கள் (எழுத்தாளர்) |
| நூல் வெளியிட்டு வாழ்த்துரை | : முனைவர் தமிழினியன் (மாவட்டக் கல்வி அலுவலர், **xxxx)** |
| முதல் பிரதியைப் பெற்றுக்கொள்பவர் | : திருமதி. அ. சரசுவதி அவர்கள் (தொழிலதிபர் மற்றும் சமூக ஆர்வலர்) |
| நன்றியுரை | : திரு. இரா. கேசவன் அவர்கள் (பள்ளி - மாணவ இலக்கிய மன்றச் செயலர்) |

**நன்றியுரை:**

அனைவருக்கும் மாலை வணக்கம்.

எப்பொழுதெல்லாம் நம் எழுதுகோல் தலை குனிகிறதோ அப்பொழுதெல்லாம் நீ வாழ்வில் தலை நிமிர்வாய் என்றபடி தன் எழுதுகோலைத் தலைகுனிய வைத்து இந்த அவையில் தலைநிமிர்ந்து இருக்கும் தமிழாசிரியருக்கு நன்றி. இவர் செதுக்கியதை வர்ணம் தீட்டி குடமுழுக்கு விழா செய்து நம் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் நூலை வெளியிட்டு வாழ்த்துறை வழங்கிய மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களுக்கு நன்றி. பிறையைத் தலையிலே சூடிய சிவனைப் போல் இவ்விழாவிற்கு வருகைதந்து நூல் அறிமுகவுரை தந்த பிறைசூடனுக்கு நன்றி. எந்த ஒரு செயலும் இனிதே தொடங்க இறையருள் தேவை, அதோடு செல்வமும் தேவை என்பதற்கு ஏற்ப செல்வத்தின் நாயகியாம் தொழிலதிபர் திருமதி. சரசுவதி அவர்களின் கரங்களால் முதல் பிரதியைப் பெற்று துவங்கி வைத்தமைக்கு நன்றி. இவ்விழா நடைபெற முழு காரணமாக விளங்கிய தலைமை ஆசிரியர், ஆசிரிய நண்பர்கள், மாணவர்கள், ஏனைய உறவுகளுக்கு விழாக்குழு மூலம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

**இலக்கணத் தேர்ச்சிகொள் (புத்தக ஒரு மதிப்பெண் வினாக்கள்)**

1. பிழையான தொடரைக் கண்டறிக.
   அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.
   ஆ) மலைமீது ஏறி கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
   **இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.**
   ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

2. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.
   **அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.**
   ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
   இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
   ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

**குறுவினாக்கள்: (புத்தக இரண்டு மதிப்பெண் வினாக்கள்)**

1. **முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணரத்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.**

**முடிந்தால் தரலாம்: - இயன்றால் தரலாம்**

❖ உன்னிடம் உள்ள பொருள்களைக் கொண்டு ஏழைகளுக்கு உதவ **முடிந்தால் தரலாம்.**

**முடித்தால் தரலாம்: - நிறைவு செய்த பின் தரலாம்.**

❖ வீட்டின் திறவுகோலை வேலைகளை **முடித்தால் தரலாம்.**

2. **தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?**

❖ எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும்

❖ ந,ண,ன / ல,ள,ழ / ற,ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து ஒலிக்க வேண்டும்.

❖ தமிழில் இவ்வெழுத்துகள் வரும் முறையையும் அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிந்து கொள்வது இன்றியமையாத ஒன்றாகும்.

❖ தொடக்கத்தில் சிலகாலம் வாய்விட்டோ அல்லது மனத்துக்குள் உச்சரித்தபடியோ எழுதப்பழகுவது நல்லது.

❖ வேகமாக எழுத முயல்வது பிழைக்கு வழிகோலும். எனவே நிதானமாக எழுதுவது நல்லது.

❖ கெ, கே, கொ, கோ போன்று கொம்புடைய குறில் நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுத வேண்டும்.

## மொழியை ஆள்வோம்

**தமிழாக்கம் தருக.**

1. Learning is a treasure that will follow its owner everywhere.
   கற்றல் எல்லா இடங்களிலும் உரிமையாளரைப் பின்பற்றும் ஒரு பொக்கிஷமாகும். / கற்றல் என்பது ஒரு புதையல் போலக் கற்பவரை அது தொடர்ந்து செல்லும்.
2. A new language is a new life.
   ஒரு புதிய மொழி என்பது ஒரு புதிய வாழ்க்கையைப் போன்றது.
3. If you want people to understand you, speak their language.
   மக்கள் உங்களைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில் நீ அவர்களது மொழியில் பேச வேண்டும்.
4. Knowledge of languages is the doorway to wisdom.
   மொழிகளின் அறிவு ஞானத்திற்கான முக்கிய வழித்தடம்
5. The limits of my language are the limits of my world.
   என் மொழியின் வரம்புகள் என் உலகின் வரம்புகளாகும் / என் மொழியின் எல்லைகள் என் உலகின் எல்லைகளாகும்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே. - **மொழி வரலாறு(மு.வரதராசனார்)**

**வினாக்கள்:**

1. மொழி என்பது யாது?
2. பெற்ற தாயின் முதல் வேட்கை என்ன?
3. மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?
4. மொழியை வளர்ப்பவரும் மொழியால் வளர்பவரும் யார்?
5. தாய் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி எது?

## இலக்கிய நயம் பாராட்டல்

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி!
- கண்ணதாசன்

**திரண்ட கருத்து :**

முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற மூன்று சங்கங்களை அமையச் செய்தவள், அங்கே புதுமைமிகு பழம்பெரு புலவர்களைச் சங்கத்திற்க வரவழைத்தவள், முச்சங்களிலும் அளவிடற்கரிய பொருள் சுவையும், சொற்சுவை மிகுந்த பாடல்களையும் புனையச் செய்தவள், இவ்வாறு பல அற்புதங்கள் யாவையும் தமிழின்கண் வரவழைத்த தமிழ்ப்பெருமாட்டியே எனக் கண்ணதாசன் தமிழன்னையைப் போற்றுகிறார்.

**மையக்கருத்து :**

முச்சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த புலவர்களைச் சங்கத்திற்கு வரவழைத்து தமிழ்மொழியைப் சிறப்பாகப் புனையச்செய்த தமிழ்த்தாயின் சிறப்புகளைக் கண்ணதாசன் பெருமிதமாகக் கூறுகிறார்.

**மோனை நயம் :**

முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை நயம்

**சான்று :-**

- முச்சங்கம் - முதுபுலவர்
- அச்சங்கம் - அளப்பரிய

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

**எதுகை நயம்**

இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகை நயம்

**சான்று : -**

- முத்சங்கம் - அத்சங்கம்
- சொற்சங்கம் - அற்புதங்கள்

**இயைபு நயம் : -**

கடைசி எழுத்தோ அல்லது அசையோ அல்லது சீரோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபு நயம்

**சான்று : -**

- கூட்டி - தமை கூட்டி
- பொருள் கூட்டி - கவி கூட்டி

**அணி நயம் :**

- இப்பாடலில் **உயர்வு நவிற்சி அணி** பயின்று வந்துள்ளது.

**சுவை நயம் : -**

- இப்பாடலில் **பெருமிதச்சுவை** பயின்று வந்துள்ளது.

**தலைப்பு: "தமிழ்ப்பெருமாட்டி"**

**உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

1. **தாமரை இலை நீர்போல**
   - மாற்றுக்கருத்து உடையவரிடம் உறவாடும் போது **தாமரை இலை நீர்போலப்** பழக வேண்டும்.
2. **கிணற்றுத்தவளைபோல**
   - பள்ளிக்கூட்டங்களில் பயிலும்போது பாடப்புத்தகங்களை மட்டும் படித்துக் **கிணற்றுத்தவளை போல** அல்லாமல், அவ்வப்போது நூலகங்களுக்கும் செல்ல வேண்டும்.
3. **எலியும் பூனையும்போல**
   - நம் உடன் பிறந்தவர்களிடம் **எலியும் பூனையும் போல** எப்போதும் சண்டையிடாமல் அன்பாக நடப்பது அழகு.
4. **அச்சாணி இல்லாத தேர்போல**
   - ஒரு இலக்கை அடைவதற்கும் முயற்சியும் பயிற்சியும் இன்றிச் செயலைத் தொடர்வது **அச்சாணி இல்லாத தேர் போல** ஆகிவிடும்.
5. **உள்ளங்கை நெல்லிக்கனிபோல**
   - எங்கள் தமிழாசிரியர் இலக்கணம் நடத்தும் போது சொல்லும் விளக்கங்கள் **உள்ளங்கை நெல்லிக்கனி போல** விளங்கும்.

**ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.**

**தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்.**

எண்ணத்தை வெளியிடுவதற்கும், சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் தாய் மொழியே துணைநிற்கும் - இதனை வலியுறுத்தி பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

தாய்மொழிக் கல்வியின் தேவை – தாய்மொழிச் சிந்தனை – அறிஞர்களின் பார்வை – கற்கும் திறன் - பயன் - இன்றையநிலை

## தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்

**முன்னுரை**

**"தமிழ்மொழி கண் போன்றது**
**பிறமொழி கண்ணாடி போன்றது"**

நமது எண்ணங்களைப் பிறருக்கு வெளிப்படுத்த உதவுவது மொழியே. மொழியால்தான் கருத்துப் பரிமாற்றமும் செய்கின்றான். தனது எண்ணத்தை வெளியிடுவதற்கும் சிந்தனையாற்றலைப் பெருக்கவும் துணையாக இருக்கும் தாய்மொழி வழிக் கல்வியின் சிறப்புகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தாய்மொழிக் கல்வியின் தேவை :**

மனிதனின் அடையாளம் அவனது தாய்மொழிதான். கல்வி என்பது தாய்மொழி வழியாக மட்டுமே கற்பிக்கப் பட வேண்டும். மனிதனின் சிந்தனையும் கற்பனையும் தாய்மொழியில்தான் உருவாகின்றன. எனவே, மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்குத் தாய்மொழிக் கல்வியே சிறந்தது.

**தாய்மொழிச் சிந்தனை :**

தாய்மொழிதான் சிந்திக்கும் திறனின் திறவுகோலாக இருக்கின்றது. எத்தனை மொழிகள் கற்றாலும் எந்த மொழியைக் கற்றாலும் ஒருவனின் சிந்தனை உருவெடுப்பது தாய்மொழியில்தான். தாய்மொழியில் சிந்தனை பெருகும். மனிதர்களின் மனவெழுச்சி வாழ்விற்கு அடிப்படை அத்தகைய மனவளர்ச்சியைத் தாய்மொழியால் மட்டுமே கொடுக்க இயலும்.

**அறிஞர்களின் பார்வை :**

தாகூருடைய (வங்காளம்) தாய்மொழியில் அவருக்குள்ள பற்றுதலும்தான் காரணம் என்கிறார் காந்திஜி. தாய்மொழியில் அறிவியல் கல்வியைக் கொடுப்பதன்மூலம் ஆக்கபூர்வ சிந்தனையை குழந்தைகள் மத்தியில் கொண்டுவர முடியும் என்கிறார் டாக்டர். அப்துல்கலாம்.

**கற்கும் திறன் :**

தாய்மொழியைப் போற்றி வீழ்ந்த நாடும் இல்லை. தாய்மொழியைப் புறக்கணித்து வாழ்ந்த நாடும் இல்லை. தாய்மொழி மூலமாகவே ஒருவர் தான் கூற விரும்பும் கருத்தைத் தெளிவாகவும் முழுமையாகவும் ஆழமாகவும் தெரிவிக்க முடியும். கற்கும் திறன் அதிகரிப்பது தாய்மொழி வழியாகவே, தாய்மொழி வழியாகக் கற்கும் போது சிந்தனைத்திறன் அதிகமாகும்.

**தாய்மொழியில் கற்பதன் பயன் :**

"கருவில் உள்ள குழந்தை ஏழு மாதத்திலேயே மூளை முதிர்ச்சி பெற்று ஒலிகளைக் கேட்கிறது" என்கின்றனர். மருத்துவ அறிஞர்கள், குழந்தை வளரும் சூழல் மொழித்தாக்கத்திற்கு அடிப்படையாக அமைகிறது. அக்குழந்தைகள் தாய்மொழி வழியாகக் கற்கும் சூழல் ஏற்பட்டால் மிகச் சிறந்த அறிஞர்களாக, மேதைகளாக அக்குழந்தைகள் வளரும். குழந்தைகள் தாய்மொழி வழியாகக் கல்வி கற்றால் தரமான கல்வியைப் பெறுவார்கள்.

**இன்றையநிலை :**

ஆங்கில மோகத்தாலும், பிற மொழிகளின் ஊடுருவலாலும் தமிழ்மொழி மறைமுகமாகப் பின்னுக்குத் தள்ளப்படுகிறது. தமிழ்மொழி வழிக் கற்றலை அரசு ஊக்குவிக்க வேண்டும். உலகின் முதல்மொழியாம் தமிழ்மொழியின் மகத்துவத்தை உலகிற்கு உணர்ந்த வேண்டும்!

**முடிவுரை:**

எண்ணத்தை வெளியிடுவதற்கும், சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் தாய் மொழியே துணைநிற்கும் என்பதை இக்கட்டுரை வழி அறிந்தோம்.

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



ஆதிமனிதன் குகைகளில் தங்கி வாழ்ந்தான். வாழ்க்கை என்பது உணவு தேடுவதோடு முடிந்துவிடுவதில்லை. அவன் அன்றாட வாழ்விலும் சிந்தனை இருந்திருக்கிறது. தன் உறைவிடமான குகையை அழகுபடுத்த முயன்றுள்ளான். அத்துடன் தன் அனுபவங்களைக் கோட்டுருவங்காளாக வரைந்துள்ளான். கருவிகளைக் கற்களைக் கொண்டு செய்தவன், தன் சிந்தனைக்குக் கலை வடிவம் கொடுக்க முயன்றுள்ளான். கற்காலத்தில் வாழ்ந்தாலும், கலை உணர்வுடன் வாழ்ந்துள்ளான் போலும்.

**அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக.**

குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்
தாயின் குரலில் உயிரின் ஒலி
**உயிரின் ஒலியே உணர்வின் பிரதிபலிப்பு**
**உணர்வின் பிரதிபலிப்பே உள்ளத்தின் வெளிப்பாடு.**

**மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிக்கவும்**

1. கவிஞர்; ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம் - கவிமணி
2. தமிழறிஞர் ; முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம் - மலைமலை அடிகள்
3. தாய்மொழி; ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும் - தமிழ் ஒளி
4. சிறுகதை ஆசிரியர்; முதல் பாதி நவீனம் - புதுமைப்பித்தன்
5. முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம் - கோதை

**நிற்க அதற்குத் தக**

**கீழ்க்காணும் செயல்பாடுகளைச் சரி/ தவறு எனப் பிரித்து, சரியெனில் காரணமும் தவறு எனில் மாற்றுவதற்குரிய செயலையும் குறிப்பிடுக.**

| செயல்பாடு | சரி - காரணம் | தவறு - மாற்றம் |
|---|---|---|
| பொருள்களை எடுத்த இடத்தில் வைத்தல் | **சரி.** பொருள்களைத் தேடாது எடுக்க முடியும். நேரம் வீணாதல் தவிர்க்கப்படும். | |
| பொதுவிடத்தில் எச்சில் துப்புதல் | | **தவறு.** சுகாதாரக்கேட்டைத் தவிர்க்க சாலையோரம், சாக்கடைகளில் துப்பலாம். நோய் பரவுவதைத் தடுக்கலாம். |
| வகுப்பில் காகிதங்களைக் கிழித்துப் போடுதல் | | **தவறு** . குப்பைக் கூடங்களில் போடுதல். புத்தகங்களைக் கிழிக்கக் கூடாது. வகுப்பறையைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். |
| இருக்கை, மேசைகளில் கிறுக்குதல் | | **தவறு.** இருக்கை, மேசை தோற்றம் வீணாகிவிடும் மற்றும் பொதுச் சொத்துக்களைக் கிறுக்கி சேதப்படுத்தக் கூடாது. |

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

- Subscription - உறுப்பினர் கட்டணம்
- Archive - ஆவணம்
- Fiction - புனைவு
- Manuscript - கையெழுத்துப் பிரதி
- Biography - வாழ்க்கை வரலாறு
- Bibliography - நூல் நிரல்

## இலக்கணக் குறிப்பு, உறுப்பிலக்கணம் , புணர்ச்சி விதிகள்

### இளந்தமிழே

**இலக்கணக் குறிப்பு:**

1. **செம்பரிதி, செந்தமிழ், செந்நிறம்** - பண்புத்தொகைகள்
2. **முத்துமுத்தாய்** - அடுக்குத்தொடர்
3. **சிவந்து** – வினையெச்சம்
4. **வியர்வைவெள்ளம்** - உருவகம்

**உறுப்பிலக்கணம்:**

1. **சாய்ப்பான் = சாய் + ப் + ப் + ஆன்**
   - சாய் - பகுதி
   - ப் - சந்தி
   - ப் - எதிர்கால இடைநிலை
   - ஆன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி
2. **விம்முகின்ற = விம்மு + கின்று + அ**
   - விம்மு - பகுதி
   - கின்று - நிகழ்கால இடைநிலை
   - அ - பெயரெச்ச விகுதி
3. **வியந்து = விய + த்(ந்) + த் + உ**
   - விய - பகுதி
   - த் - சந்தி ( ந் ஆனது விகாரம்)
   - த் - இறந்தகால இடைநிலை
   - உ - வினையெச்ச விகுதி
4. **இருந்தாய் = இரு + த்(ந்) + த் + ஆய்**
   - இரு - பகுதி
   - த் - சந்தி ( ந் ஆனது விகாரம்)
   - த் - இறந்தகால இடைநிலை
   - ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

**புணர்ச்சி விதிகள்:**

1. **செம்பரிதி = செம்மை + பரிதி**
   **விதி: ஈறுபோதல்** - செம் + பரிதி – செம்பரிதி
2. **வானமெல்லாம் = வானம் + எல்லாம்**
   **விதி : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே** – வானமெல்லாம்
3. **உன்னையல்லால் = உன்னை + அல்லால்**
   **விதி 1: இ ஈ ஐ வழி யவ்வும்** - உன்னை + ய் + அல்லால்
   **விதி 2: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே** – உன்னையல்லால்

SHRI KRISHNA ACADEMY www.Padasalai.Net

4. செந்தமிழே = செம்மை + தமிழே
விதி 1: ஈறு போதல் - செம் + தமிழே
விதி 2: முன்னின்ற மெய் திரிதல் - செந்தமிழே

## தன்னேர் இலாத தமிழ்

**இலக்கணக் குறிப்பு:**

1. **வெங்கதிர்** – பண்புத்தொகை
2. **உயர்ந்தோர்** - வினையாலணையும் பெயர்
3. **இலாத** – இடைக்குறை

**உறுப்பிலக்கணம்:**

1. **உயர்ந்தோர் = உயர் + த்(ந்) + த் + ஓர்**
உயர் - பகுதி
த் - சந்தி (த் - ந் ஆனது விகாரம்)
த் - இறந்தகால இடைநிலை
ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி
**ஆர் என்பதன் ஈற்றயலெழுத்தான "ஆ" "ஓ" ஆகத் திரியும் (நன். 353)**

2. **விளங்கி = விளங்கு + இ**
விளங்கு – பகுதி
இ - வினையெச்ச விகுதி
3. **வந்து = வா(வ) + த் (ந்) + த் + உ**
வா – பகுதி (வ எனக் குறுகியது விகாரம்)
த் - சந்தி (த் - ந் ஆனது விகாரம்)
த் - இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி.

**புணர்ச்சி விதிகள்:**

1. **ஆங்கவற்றுள் = ஆங்கு + அவற்றுள்**
**விதி 1:உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்** - ஆங்க் + அவற்றுள்
**விதி 2: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே** – ஆங்கவற்றுள்
2. **தனியாழி = தனி + ஆழி**
**விதி 1: இ ஈ ஐ வழி யவ்வும்** - தனி + ய் +ஆழி
**விதி 2: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே** - தனியாழி
3. **வெங்கதிர் = வெம்மை + கதிர்**
**விதி 1: ஈறுபோதல்** - வெம் + கதிர்
**விதி 2: முன்னின்ற மெய் திரிதல்** - வெங்கதிர்

## மனப்பாடப்பாடல்
### தன்னேர் இலாத தமிழ்
### தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்

"ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!"

- தண்டி